Registered as a Newspaper

தத்ரூபமான
புகைப்படங்களுக்கு நினைவில்
நிறுத்திக்கொள்ளுங்கள்
கவி போட்டோ
"தம்பு பில்டிங்"
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.
உங்கள் தேவை அறிந்து
சிறப்பான சேவையாற்ற
என்றும் தயாராக
உள்ளோம்,

# உதயன்

விலை ரூ. 1/-

பாதுகாப்பான சூழலில்
நவநாகரிக
தையல் வேலைகளுக்கு
நாடவேண்டிய
சிறந்த ஸ்தாபனம்
சஹீட் ரெயிலறிங்
"தம்பு பில்டிங்"
கே. கே. எஸ். வீதி,
இணுவில்.

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

சுடர்:- 2 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு கார்த்திகை மீ 18 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1407 ரபியு ஆகிர் பிறை 01 (04-12-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:-7

## விஜே குழுவினர் 2 பஸ்களில் புறப்பட்டனர்

கொழும்பு, டிச. 4
சிறிலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் திரு விஜயகுமாரணதுங்க இரண்டு பஸ்களில் 75 பேருடன் தனது இரண்டாவது யாழ் விஜயத்தை நேற்று கொழும்பில் இருந்துஆரம்பித்தார்.

மருதானையில் உள்ள கட்சித் தலைமைக்காரியாலயத்தில் வைத்து ஆதரவாளர்கள் விஜே குழுவினரை வழியனுப்பி வைத்தனர். 28 பௌத்த குருமார், சிறை வைக்கப்பட்டுள்ள இரண்டு சிறிலங்கா சிப்பாய்களின் பெற்றோர்கள், கட்சி உதவிச்செயலாளர் ஒஸி அபயகுணசேகரா நிர்வாகச் செயலாளர் பி. வை. டி. சில்வா கட்சி ஆதரவாளர்கள் உட்பட 75 பேர் இரண்டு பஸ்களில் பிரயாணத்தை நேற்று மாலை ஆரம்பித்தனர்.

அனுராதபுரத்தில் வைத்து மேலும் பல பௌத்த மத குருமார்கள் இப்பயணத்தில் சேர்ந்து கொள்வர் என்று கொழும்பில் வைத்து தெரிவிக்கப்பட்டது.

ஐந்து பத்திரிகையாளர்களும் விஜே குழுவுடன் யாழ்ப்பாணம் வருகின்றனர்.

நேற்று இரவு இக்குழு அனுராதபுரத்தில் தங்கி இன்று காலை மீண்டும் யாழ் நோக்கி பயணத்தை ஆரம்பிக்க திட்டம் இடப்பட்டிருந்தது.
(இ-ஐ-எ)

## லலித் அமெரிக்கா செல்கிறார்

கொழும்பு, டிச. 4
தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி எதிர்வரும் சனிக்கிழமை அமெரிக்கா செல்கிறார்.

நியூயோர்க் நகரில் உள்ள தனியார் ஒலி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 5 நாள் பாத யாத்திரை இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம், டிச. 4
விஜிதரன் தொடர்பான பிரசார 5 நாள் பாத யாத்திரையை யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இன்று ஆரம்பிக்கின்றனர்.

நேற்று நடைபெற்ற மாணவர் பொதுக்கூட்டத்தில் இதுபற்றித் தீர்மானிக்கப்பட்டது.

பாத யாத்திரை நடப்பதையொட்டி, இவ் வாரம், அராஜகத்துக்கான மாணவரின் முதல் வாரமாகவும் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இன்று காலை 5 பிரிவுகளாக பாதயாத்திரை ஆரம்பமாகும்.

ஒவ்வொரு பிரிவிலும் குறைந்தது 30 மாணவர்கள் கலந்துகொள்வர்.

தீவுப்பகுதி; பலாலி வீதி, பருத்தித்துறை வீதி; மானிப்பாய், கே. கே. எஸ். வீதி; வடமராட்சி தென்மராட்சி

(4ஆம் பக்கம் பார்க்க)

★ விஜேயும் பிக்குமாரும்—..... பிந்திய செய்தி

# வவுனியாவுக்கு அப்பால் வருவதை தடுக்க உத்தரவு!

— கொழும்பிலிருந்து சிறப்புச் செய்தியாளர் —

கொழும்பு, டிச. 4
ஸ்ரீலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் திரு. விஜய குமாரணதுங்கவையும் அவருடன் வரும் பௌத்த குருமார் குழுவையும் வவுனியாவுக்கு அப்பால் யாழ்ப்பாணம் செல்ல அனுமதிக்க வேண்டாம் என்று வவுனியா ஆயுதப் படை முகாமுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இந்த உத்தரவைத் தொடர்ந்து வவுனியாப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன என்று அறிய வருகிறது.

கடற் பகுதியிலும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

இவர்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பு உத்தரவாதம் கொடுக்க முடியாது என்ற காரணத்தினாலேயே வவுனியாவுக்கு அப்பால் விஜே குழுவைச் செல்ல அனுமதிக்க வேண்டாம் என்று வவுனியா ஆயுதப்படை முகாமுக்கு உத்தரவிடப் பட்டுள்ளது என்று தெரிய வருகிறது (அ-10)

## யாழ் புறப்படமுன் மகாநாயக்கரின் ஆசி பெற்றார் விஜே

கொழும்பு, டிச. 4
இரண்டாவது யாழ்ப்பாண விஜயத்தை ஆரம்பிக்கும் முன்னர் ஸ்ரீலங்கா மக்கள் கட்சிப் பொதுச் செயலாளர் திரு. விஜய குமாரணதுங்க கடந்த திங்கள் கண்டி சென்று மல்வத்தை மகாநாயக்க தேரரின் ஆசியைப் பெற்றார்.

அச்சமயம் திரு விஜய குமாரணதுங்க சொன்னதாவது: வடக்குக்கும் தெற்குக்கும் இடையே ஒரு கலந்துரையாடலை உருவாக்குவதே எனது நல்லெண்ண விஜயத்தின் நோக்கம்.

என்னுடன் வரும் பௌத்த மதகுருமார்களுக்கு எந்தவித அரசியல் தொடர்பும் கிடையாது.

உண்மையான நல்லெண்ண மனப்பான்மையுடன் இரண்டு பெரிய இனங்களுக்கும் இடையே உறவை வளர்க்க விரும்புபவர்கள் அவர்கள்.

கலந்துரையாடல் இன்றி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது.

அரசாங்கத்தின் அரசியல் தீர்வு முயற்சியை எனது கட்சி ஆதரிக்கிறது. அந்த உணர்வுடன் இந்த விஜயம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. —

இப்படி அவர் சொன்னார்.
(இ-எ)

## எப்படியாவது யாழ் செல்ல தெண்டிப்பேன்

கொழும்பு, டிச. 4
எப்படியாவது யாழ்ப்பாணம் போகத் தெண்டிப்பேன்.

இப்படி ஸ்ரீலங்கா மக்கள் கட்சிச் செயலாளர் விஜய குமாரணதுங்க சொன்னார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சர், கூட்டுப்படைத் தளபதி ஆகியோர் எனது யாழ் விஜயம் குறித்து சாதகமான கருத்துத் தெரிவிக்கவில்லை.

யாழ் விஜயம்பற்றி ஜனாதிபதிக்கும் தெரிவித்திருக்கின்றேன்.

தடுத்தாலும் நான் யாழ் செல்லத் தெண்டிப்பேன் —

இப்படி திரு. விஜயகுமாரணதுங்க சொன்னார்.
(இ-எ)

முச்சந்தி முனி



விளம்பரத்திரங்களும் இராணுவ முகாம்களைத் தரிசிக்க வேணும் எண்டு ஒரு தலை விதியோ...?

## தேர்தலுக்கு தயாராகுங்கள் என்கிறார் சிறிமா

கொழும்பு, டிச. 4
வெகு விரைவில் தேர்தல் நடைபெற உள்ளது. அதற்கு மக்கள் தயாராக இருக்கவேண்டும்.

களுத்துறைக் கூட்டத்தில் பேசுகையில் சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்ட வேண்டுகோளை விடுத்தார்.

சமாதான முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்தால் யுத்தம்தான் என்று பேசப்படுகிறது.

இது மக்களை குருடன்

(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் உரிமை கோருகின்றனர்

யாழ்ப்பாணம், டிச. 4
மட்டக்களப்பு கும்புறுமூலையில் பொலீஸ் கொமாண்டோக்கள்மீது கடந்த செவ்வாய்க்கிழமை தமிழீழ விடுதலைப் புலிகளே தாக்குதல் நடத்தினர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நடந்துவந்தகொமாண்டோக்கள் மீது வாழைச்சேனை முகாமில் இருந்து ஒருமைல் தூரத்தில் வைத்து கனன்சார்ஜ் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதில் ஒரு கொமாண்டோ இறந்தார். பலர் காயமடைந்தனர்.
(இ-எ)

## ஜீ. சி. ஈ. பரீட்சை நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச. 4
நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் இம்முறை 4 லட்சத்து 40 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுவர்.

ஒரு பொதுப் பரீட்சையில் அதிக மாணவர் தோற்றுவது இதுவே முதல்தடவை.

இதில் அரைவாசி மாணவர்கள் முதல் தடவையாகப் பரீட்சையில் தோற்றுகிறார்கள்.

யாழ். மாவட்டத்தில் 40 ஆயிரம் மாணவர்கள் தோற்றுகிறார்கள்.

இவர்களுக்காக 189 பரீட்சை நிலையங்களும்; 27 இணைப்பு நிலையங்களும் கல்வித் திணைக்களத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

பலாலி முகாமும்; யாழ் இந்துக் கல்லூரியும் பிராந்திய இணைப்பு சேகரிப்பு நிலையங்களாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திரா கொலை வழக்கில் மரண தண்டனை ஊர்ஜிதம்

### கண்ணாடி அடைப்புக்குள் இருந்து தீர்ப்பு

புதுடில்லி, டிசம்பர் 3
இந்திரா காந்தி கொலை வழக்கில் மூன்று சீக்கியத் தீவிரவாதிகளுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை புதுடில்லி உயர் நீதிமன்றத்தினால் இன்று ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

மூன்று உயர் நீதிமன்ற நீதியரசர் குழு தண்டனையை ஊர்ஜிதம் செய்தது.

துப்பாக்கி ரவைகள் புக முடியாத கண்ணாடி அடைப்புக்குள் இருந்தபடி நீதியரசர்கள் இந்தத் தீர்ப்பை வழங்கினார்கள்.

சத்வன்சிங், பல்பீர் சிங், கிஸ்சிங் ஆகியோர்தான் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்கள் ஆவர்.
(இ-எ)

## சண்முகநாதன் நினைவு விழாவும் சிறுவர் தின விழாவும்

யாழ்ப்பாணம், டிச. 4
அமரர் இ. க. சண்முகநாதன் அவர்களின் நினைவு தின விழாவும் பாலர் பகல் விடுதி சிறுவர் தின விழாவும் இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு நீர்வேலியில் நடைபெறும்.

சமுதாய முன்னேற்றக் கழகம் ஏற்பாடு செய்யும் இவ் விழாவிற்குத் திரு. வீ. எஸ். அப்புத்துரை தலைமை வகிப்பார்.

வலி-கிழக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. குலேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

அமரர் இ. க. சண்முகநாதன் அவர்களின் நினைவுப் பேருரையை ஒய்வு பெற்ற கல்வித் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. ஏ. வி. மயில்வாகனம் நிகழ்த்துவார்.
(உ-ஒ)

## கதிரவெளியில் இருவர் சூட்டுக்குப் பலி

மட்டக்களப்பு, டிச. 4
மட்டக்களப்பு திருகோணமலைவீதியில் கதிரவெளி என்னுமிடத்தில் ஆயுதபடையினரால் இரண்டு தமிழ் இளைஞர்கள் திங்கள் பிற்பகல் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

டி. பாலசந்திரன் வயது 17, எஸ். சின்னையா வயது 20 ஆகியோரே அவர்கள்.

கதிரவெளி வாசிகளான அவர்களின் சடலங்களைப் படையினர் முகாமுக்கு எடுத்துச் சென்றனர். (இ-எ-21)

## தொழிலாளி மீது சூடு!

யாழ்ப்பாணம், டிச. 4
தொழிலாளி மீது சிப்பாய்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

நேற்றுக்காலை பத்து மணி அளவில் பருத்தித்துறையில் உள்ள திக்கத்தில் இச்சம்பவம் நடந்தது.

சுப்பையா இரத்தினம் (33 வயது) என்பவரே சிப்பாய்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவராவார்.

இவருக்கு காலிலும் இடுப்பிலும் காயங்கள் ஏற்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.
(இ-10)

## ஹெலி மூலம் தீவுப்பகுதி வினாத்தாள்கள்

யாழ்ப்பாணம், டிச. 4
தீவுப்பகுதி பரீட்சார்த்திகளுக்கான ஜீ. சி. ஈ. சாதாரணதரப் பரீட்சை வினாத்தாள்கள் ஹெலிக்கொப்டர் மூலம் பலாலி முகாமிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நயினாதீவில் உள்ள இராணுவ முகாமிலிருந்து இந்த வினாத்தாள் பொதிகள் தீவுப் பகுதி பரீட்சை மண்டபங்களுக்கு விநியோகிக்கப்படும்.
(இ-5)

## 41 பேர் இன்னும் தடுத்து வைப்பு

மட்டக்களப்பு, டிச. 4
களுவாஞ்சிக்குடியில் நேற்று நடத்தப்பட்ட தேடுதலின்போது கைதானவர்களில் 41 பேர் மேல்விசாரணைக்காக இன்னும் தடுத்து வைக்கப்படடுள்ளனர்.

76 பேர் அன்றைய தினமே விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டு விட்டனர். (இ-எ-21)

வாடிக்கையாளர்களுக்கு ஒரு முக்கிய
அறிவித்தல்
இன்றைய காலகட்டத்தில் உங்களின்
நலன்கருதி
1ஆம் கட்டிடம், நவீன சந்தை
மேல் மாடியில் உள்ள
எமது கிளை நிறுவனம்
05-12-1986 தொடக்கம்
ஸ்ரான்லி றேட்டிற்கு
(V. K. ராஜரட்ணத்திற்கு எதிராகவும்,
விக்ரர் அன் சன்சிற்கு பக்கத்திலும்)
இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது
(இங்கு திருமணக்கூறை, பட்டுவேட்டி
போன்ற சகலவிதமான புடைவைத்
தினுசுகளும் கிடைக்கும்.)
ஹப்பி ரெக்ஸ்ற்
இல: 104, ஸ்ரான்லி றேட்,
யாழ்ப்பாணம்.

## மட்டக்களப்பு பல்கலைக்கழக உண்ணாவிரதம் நேற்று கைவிடப்பட்டது

மட்டக்களப்பு, டிச. 4
மட்டக்களப்புப் பல்கலைக் கழக மாணவரின் உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுப் பிற்பகல் மூன்று மணியுடன் கைவிடப்பட்டது.

பல்கலைக் கழக ஆண் விடுதியை 2 பெண் அதிகாரிகள் சோதனையிட்டதைத் தொடர்ந்து ஏற்பட்ட பிரச்சினை காரணமாகவே மாணவர் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

நேற்றுப்பிற்பகல் மாணவர்கள் பிரதிநிதிகளுடன் உபவேந்தர் பேராசிரியர் கே. டி. அருள்பிரகாசம் நடத்திய பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டதைத் தொடர்ந்தே, போராட்டம் விலக்கிக் கொள்ளப் பட்டது.

விடுதி சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை குறித்து விசாரணை நடத்தப்படும். ஒத்திவைக்கப்பட்ட பரீட்சைகள் இம்மாதம் 16 ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கப்படும். மூடப்பட்ட மாணவர் விடுதி திறக்கப்படும்.

இந்த முடிவுகள் பேச்சுக்களின்போது ஏற்றுக் கொள்ளப்பட்டன.
(இ-எ-21)

## "எம் மக்களை இறுதி மூச்சுவரை பாதுகாப்போம்"

யாழ்ப்பாணம், டிச.4
"எம்மக்களை இறுதி மூச்சுவரை பாதுகாப்போம்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட வர்ண சுவரொட்டிகள் யாழ் குடாநாட்டில் பல பகுதிகளிலும் தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஒட்டப்பட்டுள்ளன. (இ-10)

## சுபநேரம்

04—12—1986
வியாழக்கிழமை
சுபநேரம்;
7 .45 முதல் 9 .15 வரை
ராகுகாலம்;
1.45 முதல் 3. 15 வரை
இவை பகலுக்கும்
இரவுக்கும் பொருந்தும்

## ரூ. 50,000 நஷ்டமாம்

யாழ்ப்பாணம், டிச. 4
இராணுவத் தாக்குதல் காரணமாக யாழ். தொலைத்தொடர்பு நிலையத்துக்கு ஐம்பதினாயிரம் ரூபா வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பண்ணை பொலீஸ் விடுதியில் இருந்து நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினால் மட்டும் பத்தாயிரம் ரூபா வரை சேதம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.
(இ-10)

பாலைமீன்மடு கிராமத்தில்

## படையினர் சுட்டு 5 தமிழர் பலி!

மட்டக்களப்பு, டிசம்பர் 4
பாலைமீன்மடு கிராமத்தில் நேற்றுக் காலை ஆயுதப்படையினர் நடத்திய தேடுதலின்போது 5 தமிழ் இளைஞர்கள் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்கள்.

மூன்று இளைஞர்களின் சடலங்களை கல்லடி முகாமுக்குப் படையினர் எடுத்துச் சென்றனர்; இரு சடலங்களை அந்த இடத்திலேயே விட்டுச் சென்றனர்.

விசாரணைக்காக அப்பகுதியைச் சேர்ந்த 75 தமிழர்களை ஆயுதப்படையினர் கல்லடி முகாமுக்கு கொண்டு சென்றனர்.
(இ-எ-21)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் சண்முகநாதனின்

## நினைவு விழாவும் சிறுவர் தின விழாவும்



அமரர் திரு இ க சண்முகநாதன் அவர்கள் அமரத்துவமெய்தி ஓராண்டு பூர்த்தியாகிவிட்டது இதனை நினைத்துப் பார்க்கும்பொழுது உண்மையாகவே நம்ப முடியவில்லை.

எமது மத்தியில் அவர் இல்லை என்றாலும் அவர் விட்டுச்சென்ற அத்தனை அரும் பணிகளும் அபரிமிதமான ஆற்றலும் எம்மை வழி நடத்துவதற்குப் பெரிதும் வித்தாக அமைந்துள்ளன.

அவர் விட்டுச் சென்ற பணிகள் ஆல் போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி நிற்கின்றன அவரது ஆக்கபூர்வமான பணிகள் என்றென்றும் மக்கள் மனதை விட்டு அகலாத அரும்பணிகளாக அமைந்துள்ளன.

வலிகாமம் கிழக்கு தென் பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க மொத்த விற்பனவு மண்டபத்தை அமைக்கும் பணியில் ஈடுபட்டு அதற்கெனப் பல லட்சம் ரூபா செலவில் மிக அழகானதோர் மாடிக் கட்டடத்தை அமைத்தார்

அமரர் சண்முகநாதன்

நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகம் சிறப்பான இடத்தை அவருக்கு வகுத்துக் கொடுத்துள்ளது

அகில இலங்கைக்குமே முன்னோடியானதும், வெளிநாட்டவர்கள் ஆபிரக்கணக்கானோர் பார்த்து அவர்களின் பாராட்டைப் பெற்று விளங்குகின்றதுமான சமுதாய முன்னேற்றக் கழக பாலர் பகல் விடுதியின் (CRECHE) தலைமையை ஏற்று இருபத்தேழு ஆண்டுகள் சிறப்பாகக் கடமை புரிந்துள்ளார்.

1955ஆம் ஆண்டில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. மா ஸ்ரீகாந்தா அவர்கள் சமூக சேவா ஸ்தாபனங்கள் சிலவற்றின் ஓர் ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு அனுப்பி இருந்தார்.

அன்றைய தினம் சேர். சந்தையா வைத்தியநாதன் அவர்கள் (சமூக சேவா, வீடமைப்பு கைத்தொழில் அமைச்சர்) வருகை தந்து தமது அமைச்சின் நோக்கங்களை வெளியிட்டார்

அப்பொழுது சேர். சந்தையா வைத்தியநாதன் அவர்களையும், திரு மா ஸ்ரீகாந்தா அவர்களையும் தனிமையில் சந்தித்து எமது நீர்வேலிக் கிராமத்தில் பாலர் பகல் விடுதி அமைப்பதற்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்தார்

அதற்கு அவர்கள் பெரிதும் மனமுவந்து சமூக சேவை அமைச்சின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்து தருவதாக வாக்களித்தார்கள்.

அவர்கள் இருவரது பெருந்தன்மையையும் உறுதிப்பாட்டையும் என்னால் இன்றும் மறக்கமுடியவில்லை இரு வாரத்துக்குள் எமக்கு நிதி ஒதுக்கீடு காசோலைமூலம் கிடைத்தது

விடுதி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து அவர் தலைவராகவும் நான் கௌரவ செயலாளராகவுமிருந்தோம்

பாலர் பகல் விடுதி ஒளியேற்றும் தீபமாக விளங்க ஆரம்பித்தது இவ் விடுதியில் பகலில் தொழில் புரியும் பெற்றோரின் குழந்தைகள் 70 பேர் காலை 7 மணிமுதல் மாலை 4-30 மணி வரையிலும் நன்கு பராமரிக்கப்பட்டு வந்தார்கள்

1956ஆம் ஆண்டு தொடக்கம் பாலர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது

இப் பாடசாலையில் இன்றும் 40 பிள்ளைகள் கல்வி பயின்று வருகிறார்கள். இருபத்தேழு ஆண்டுகள் நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத் தலைவராக இருந்து கௌரவ சேவை புரிந்த சாதனை என்றும் மறக்கமுடியாதது.

**வரலாற்று பட்டதாரியானார்**

1947ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்க எழுதுவினைஞர் சேவையிலீடுபட்ட அமரர் சண்முகநாதன் அவர்கள் 1950இல் அதற்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு இலங்கைப் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து 1953இல் வரலாற்றுப் பட்டதாரியானார்

1953இல் தனது ஆசிரியப் பதவியை யாழ்ப்பாணம் பரியோவன் கல்லூரியில் பொறுப்பேற்று 1960 வரையிலும் கடமையாற்றினார்

1960 இல் இருந்து 1964 வரையில் சம்பத்திரிசியார் கல்லூரியிலும் மேற்கொண்டார். அரசாங்கம் பாடசாலைகளை தனது உடைமையாக்கிக் கொண்டதின் காரணமாக சம்பத்திரிசியார் கல்லூரியிலிருந்து விலகி அதே ஆண்டில் கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரியில் சேர்ந்து கொண்டு குறுகிய காலத்தில் கிறீஸ்தவ கல்லூரி அதிபர் பதவியை பொறுப்பேற்றார்

அவர் தம் காலத்தில் கல்லூரி சிறப்பம்சம் பெற்றுக் கொண்டது 1971ஆம் ஆண்டில் பதவி உயர்வு பெற்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அதிபரானார். ஆனால் 1980 வரையும் அவர் மத்திய கல்லூரிக்கு ஆற்றிய பணி அளப்பரியது

அவரது கடமை, கண்ணியம், ஆளுமை யாவும் கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரிதும் உறுதுணைபுரிந்தன.

**உறுதியான நெஞ்சம்**

மத்திய கல்லூரியில் ஏற்பட்ட சில இடையூறுகளும், அனுபவங்களும் அவரை உலுக்கும் நிலைக்கு கொண்டுவந்தும் அவரது உறுதிகொண்ட நெஞ்சம் இம்மியளவும் நெகிழ்ந்து கொடுக்கவில்லை.

அமரர் சண்முகநாதன் அவர்கள் நீர்வேலி இளையதம்பி கணபதிப்பிள்ளைக்கும், சிவகாமிக்கும் கிடைத்த ஓர் அருந்தவப் புதல்வன். அவர் தம் சகோதரி தனலக்குமி ஆவர்.

தந்தை கணபதிப்பிள்ளை அவர்கள் புகழ்மிக்க சுதேச ஆயுள்வேத வைத்தியர். ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்தவர் அவர் தம் தொழிலில் சிறப்பான இடத்தை வகித்து வந்தார்

தந்தையின் மேம்பாடு மைந்தனைச் சான்றோனாக்கியது

'ஈன்ற பொழுது பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்' வள்ளுவரின் கூற்றினை நெறிப்படுத்தியவர் அமரர் சண்முகநாதன்

தாய்க்குப் பின் தாரம் என்பது தமிழ் மரபு. அவருக்குக் கிடைத்த அருமை மனைவி செல்வராணி அடிசிற்கினியவளாய் வாழ்ந்து காட்டியவர் அருமையான அமைதியான வாழ்வை மேற்கொண்டதன் காரணத்தால் மும்மூர்த்திகளுக்கு அப்பனும் அம்மையுமானார்கள்

செல்வராணியின் தந்தை அமரர் தம்பு என்பவர் கோப்பாய் தெற்கைச் சேர்ந்த புகழ்மிக்க அளவையாளர்.

**அமைதியானவர் ஆடம்பரமற்றவர்**

அமரர் சண்முகநாதன் அவர்கள் அமைதியைக் கடைப்பிடித்தொழுகியவர். ஆடம்பரமற்றவர் உயர்வு தாழ்வுக்கு இடமில்லையென உலகுக்கு எடுத்துக் காட்டியவர்

தனக்கென ஓர் இலட்சியப் பாதையை வகுத்து வாழ்ந்து காட்டிய பெருமை அவரையே சாரும். எமது நாட்டுக் கல்வியில் கண்டிப்பான சீர்திருத்தங்கள் உடனடியாகக் கொண்டு வரவேண்டுமென அறைகூவல் விடுத்த பெருமை அவரையே சாரும்.

அமரர் சண்முகநாதன் அவர்களுக்கு தாம் வெளிநாடு செல்ல வேண்டுமென்ற ஓர் மனமாற்றம் சில காலமாக ஏற்பட்டிருந்தது

1980ஆம் ஆண்டில் கல்வி அமைச்சின் பணிப்பின் பேரில் அவர் கல்வி அமைச்சின் கல்விப் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுப் பணியாற்றினார்

அத்துடன் அரசாங்கம் மலைநாட்டுத் தோட்டப் பாடசாலைகளை அரசாங்க உடைமையாக்கும் பணியை அவர் மூலம் மேற்கொள்ளச் செய்தது. அப்பணியை அவர் சிறப்பாக நடைமுறைப்படுத்தினார்

1983இல் நைஜீரிய நாட்டிற்குச் சென்று கடுனு மாநிலத்திலுள்ள நிதி அமைச்சரின் நிதி ஆலோசகராகப் பணியாற்றினார். அங்கு அவர் தம் சேவையை மெச்சத்தகு முறையில் ஆற்றினார். புகழில் உச்சியை அடைந்துவிட்ட அமரர் சண்முகநாதன் அவர்கள் 4-12-85இல் அம்மண்ணிலேயே அமரத்துவமெய்திவிட்டார்

அவரது அரிய சிந்தனைகளையும், அவர் விட்டுச்சென்ற நற்பணிகளையும் தொடருவோமாக

அதுவே அவருக்கு செய்யும் கைமாறாகும்

வீ. எஸ். ஐயம்புத்துரை
(தலைவர்)
சமுதாய முன்னேற்றக் கழகம், நீர்வேலி.

இது ஒரு விளம்பர அனுபந்தம்

## செய்திக்கொத்து

### சாரணர் வகுப்பு

மானிப்பாய், டிச 4

சாரணர் தலைவர்களுக்கான பயிற்சிக் கலைக்கூறு வகுப்புக்கள் இம்மாதம் 6ஆம் 7ஆம் திகதிகளில் தெல்லிப்பளை தந்தை செல்வா தொடக்கப் பள்ளி நிலையத்தில் நடைபெறும்.

11 ஆம் திகதி சாரணர் தலைவர்கள் ஒன்று சேர்தலும், மதிய போசன விருந்தும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் நடைபெறும்.

சாரணர் குழு அபிவிருத்திக்கான சீட்டிழுப்பும் அன்றைய தினம் நடைபெறும். (உ-90)

### அங்கவீனருக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், டிச 4

அம்பாறைத் தேர்தல் தொகுதியிலுள்ள அங்கவீனர்களுக்கு மூன்று சில்லு துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பாக வழங்க சமூக சேவைத் திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. (இ-5)

### இடமாற்றம்

மட்டக்களப்பு, டிச. 4

மட்டக்களப்பு உதவிப் பொலிஸ் அதிபராக கடமையாற்றி வந்த திரு ஏ. தியோப்பிளஸ் கொழும்புக்கு இடமாற்றம் பெற்று சென்றுள்ளார். (இ-21)

### நன்றி தெரிவிப்பு

கரவெட்டி, டிச. 4

ஆலம் கட்டை கடலையில் 65ஆயிரம் ரூபா செலவில் கிணறு ஒன்றை அமைத்ததுக்கு அல்வாய் அபிவிருத்திச் சங்கம் யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு அன்ரன் அல்பிறட்டுக்கு நன்றி தெரிவித்துள்ளது. (இ-70)

### இரத்தினபுரம் கிராமத்துக்கு

கிளிநொச்சி, டிச 4

1986 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியிலிருந்து இரத்தினபுரம் கிராமத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் ஒரு லட்சத்து ஐயாயிரம்ரூபா பணத்திற்கான மின் விநியோக வேலைகள் மின் சாரசபையினால் மேற்கொள்ளப்படுகின்றன. (இ-76)

### பொதுக்கூட்டம்

வேலணை, டிச. 4

யாழ் பல்கலைக்கழக மாணவன் விஜிதரனை விடுதலை செய்யக்கோரி தீவுப்பகுதி வெகுஜன அமைப்புக்கள் இணைந்து நடத்திய மாபெரும் பொதுக்கூட்டம் வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சுவாமி மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. (இ-16)

## பிள்ளைகளை வழிநடத்தும் புனித இயக்கம் சாரணர் இயக்கம்

கொடிகாமம், டிச. 4

சிறு வயது முதல் உதவி செய்தல் என்ற அடிப்படையில் பிள்ளைகளை வழிநடத்தும் ஒரு புனித இயக்கமே சாரணர் இயக்கம் ஆகும்.

பளை மகாவித்தியாலத்தில் சாரணர் குழு பரிசளிப்பு விழா கொத்தணி அதிபர் திரு ஏ பி. செல்லையா தலைமையில் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் மேற்கண்டவாறு கூறினார்.

பளை உதவி அரசாங்க அதிபர் திரு எஸ். கந்தசாமி, பங்குத் தந்தை அருள்திரு எவ் ஏ. இராசரத்தினம் அடிகள் ஆகியோரும் பேசினர்.

உதவி மாவட்ட ஆணையாளர்கள் திரு. வி. ரி நடராசா, திரு இ. சின்னத்தம்பி, காங்கேசன்துறை உதவி மாவட்ட ஆணையாளர் திரு. வி. குணரத்தினம், சாரணர் குழு அபிவிருத்திச் சங்க செயலாளர் திரு ஏ வி. ஜோர்ஸ், சாரணர் அன்னையர் மாறச் செயலாளர் திருமதி மலர் மகாலிங்கம், சாரணர் குழு காரியக் கமிட்டிச் செயலாளர் திரு எஸ். குணரத்தினம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

குழுச் சாரணர் திரு மா. புவனேந்திரன் நன்றி தெரிவித்தார் (இ-75)

## சேற்றை வாரி இறைக்கும் வாகனங்கள்

யாழ்ப்பாணம், டிச 4

மழைக் காலம் ஆரம்பித்த நாள் முதல் யாழ் நகர வீதிகளில் மழை நீர் தேங்கி நிற்கிறது.

வாகனங்கள் பாதசாரிகள்மீது சேற்று நீரை வாரியடித்து விட்டுச் செல்கின்றன.

வாகனங்களின் பொறுப்பற்றதனத்தைக் கண்டிக்க எவரும் இல்லையா என பாதசாரிகள் முணு முணுத்துக் கொள்வதை காணக் கூடியதாக இருக்கிறது. (இ-5)

## வாகனம் தடம்புரண்டு சிப்பாய்கள்பலி

மட்டக்களப்பு, டிச. 4

பொலன்னறுவ இராணுவ முகாமைச் சேர்ந்த வாகனம் ஒன்று கடந்த திங்கள் வெலிக்கந்தைக்கு அருகில் தடம் புரண்டது.

மூன்று படையினர் உயிரிழந்தனர் இரண்டு படையினர் படுகாயமடைந்தனர். (இ-எ-21)

## பாவனைக்கு உதவாத ரின் மீனுக்கு தடை

பலாலி, டிச 4

உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் திணைக்களம் காங்கேசன்துறை, மாவிட்டபுரம், தெல்லிப்பளை ஆகிய பகுதிகளில் நடத்திய பரிசோதனைகளின்போது பாவனைக்குதவாத மீன் ரின்கள் விற்பனைக்கிருப்பதைக் கண்டு பிடித்தது

தெல்லிப்பளை வைத்திய அதிகாரி டாக்டர் என். தெய்வேந்திரன் தலைமையில் சென்ற சுகாதாரக் குழுவே இப்பரிசோதனையை நடத்தியது

சில ரின் மீன்வகைகள் பாவனைக்கு உதவாதவை என தடைவிதித்துள்ளது.

கொற். 'பெங்குயின்'' 'டோல்பின்', 'வெல்பக்', 'ராய்யோ', ஆகியவையே தடைவிதிக்கப்பட்ட மீன் வகைகள் ஆகும்.

இந்த ரின் மீன்வகைகளை விற்கவேண்டாமெனவும், காலாவதியானதும், பழுதடைந்ததும், மிக ஆபத்து விளைவிக்கக் கூடியதுமான மேற்படி ரின் மீன்வகைகளைப் பாவிக்க வேண்டாமெனவும் சுகாதாரக் குழுவும், உள்நாட்டு வர்த்தகத் திணைக்களமும் வியாபாரிகளையும், பாவனையாளர்களையும் வேண்டியுள்ளன.

லேபல் அற்ற 'ரின் மீன்'களும் விற்பனைக்குத் தடை செய்யப்பட்டுள்ளன. (இ-119)

## விளையாட்டரங்கு

### இணுவில் கலை ஒளி சாம்பியனாகியது

யாழ்ப்பாணம், டிச.4

குருநகர், றெக்கிளமேசன் சனசமூக நிலையம் நடத்திய மென்பந்து சுற்றுப் போட்டியில்; இணுவில் கலை ஒளி விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவு ''ம. ஹென்றி ஜெகநாதன் வெற்றிச் சின்னம் 86'' ஐ சுவீகரித்துக் கொண்டது.

6 பேர் அடங்கிய 5 ஓவர் மென்பந்து சுற்றுப் போட்டியில் 36 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

இறுதியாட்டத்தில் இணுவில் கலை ஒளி விளையாட்டுக் கழகம் 'ஏ' பிரிவு கொக்குவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் 'பி' பிரிவை தோற்கடித்து வெற்றிச் சின்னத்தைத் தனதாக்கிக் கொண்டது.

கொக்குவில் வளர்மதி வி க 4.3 ஓவர்களில் 27 ஓட்டங்களையும் இணுவில் கலை ஒளி வி. க. 4.5 ஓவர்களில் 29 ஓட்டங்களையும் பெற்று 1 விக்கெட்டினால் வெற்றியீட்டியது

குருநகர் அலோய்ஸ் விளையாட்டுக் கழகம் 3 ஆம் இடத்தைப் பெற்றது (இ-5)

யாழ். திணைக்களங்களுக்கு

## ரூ. 250 லட்சம் பகிர்ந்தளிப்பு

யாழ்ப்பாணம், டிச. 4

அரச திறைசேரியினால் யாழ். அபிவிருத்திச் சபைக்கு ஒதுக்கப்பட்ட 1987 ஆம் ஆண்டுக்கான 250 லட்சம் ரூபாவையும்; சம்பந்தப்பட்ட யாழ் திணைக்களங்களுக்கு பகிர்ந்தளிப்பது தொடர்பான பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன

சகல திணைக்களங்களும் தமது 1987 ஆம் ஆண்டுக்கான நிதித் தேவையை யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு அறிவித்துள்ளன.

இவற்றிற்கான இறுதி ஒதுக்கீட்டு முடிவுகள் இம்மாதம் 17 ஆம் 18 ஆம் 19 ஆம் 20 ஆம் திகதிகளில் நடைபெறும் மாநாட்டில் எடுக்கப்படும்.

இம் மாநாட்டில் திணைக்கள அதிகாரிகள்; அரச அதிபர்; மாவட்ட அபிவிருத்திச்சபை செயலாளர் திரு எஸ். பரமநாதன்; கணக்காளர் திரு கே என். ராஜேந்திரம் ஆகியோர் கலந்து கொள்வர்.

பெருந்தெருக்கள் திணைக்களத்திற்கு 37½ லட்ச ரூபா ஏற்கனவே ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது

அதிகளவு நிதி இம்முறை உள்ளூராட்சி திணைக்களத்திற்கு வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (இ-5)

ஹொண்டா சைக்கிள் இல்லாமல்

## கிராமசேவகர் திரும்பி வந்தார்

### ஷெல்லடி காரணம்

வல்வெட்டித்துறை. டிச.4

இராணுவத்திடம் தரது ஹொண்டா மோட்டார் சைக்கிளை வாங்கச் சென்ற கிராம சேவகர் இடை வழியில் திரும்பி வந்தார்.

சென்றவாரம் தொண்டமானாறு ஷெல்லடியின் போது இராணுவத்திடம் அகப்பட்டு தெய்வாதீனமாக உயிர் தப்பிய பிரஸ்தாப கிராம சேவகர் தமது ஹொண்டா மோட்டார் சைக்கிளை இராணுவத்திடம் பறி கொடுத்தது தெரிந்ததே

ஹொண்டா சைக்கிளை திருப்பித்தருவதாக வாக்களித்த சிப்பாய்கள் கிராம சேவகரை மறுநாள் வரும்படி பணித்ததன் பேரில் கிராம சேவகர் மனைவி சகிதம் தொண்டமானாறு இராணுவ முகாமை நோக்கி சைக்கிளில் சென்றார்.

அப்போது முகாமில் இருந்து கிராம சேவகர் சென்ற திசையை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

கிராம சேவகர் மனைவியுடன் மீண்டும் தனது தற்காலிகவசிப்பிடத்தை நோக்கி திரும்பி வந்தார்.

மேலும் அவரின் ஹொண்டா சைக்கிள் சம்பந்தமாக யாழ் அரசாங்க அதிபரிடம் கிராம சேவகர் முறைப்பாடு செய்துள்ளதாக அறியப்படுகின்றது. (இ-160)

### விபத்தில் மரணம்

வேலணை, டிச. 4

தொழில் நிமித்தம் டோகா சென்று சாரதியாகக் கடமையாற்றியவர் அங்கு வாகன விபத்தில் சிக்கி மரணமடைந்தார்.

வேலணை மேற்கைச் சேர்ந்த திரு. எஸ். அமிர்தலிங்கம் என்பவரே இறந்தவர் ஆவார். (இ-167

### சிரமதானம்

யாழ்ப்பாணம், டிச. 4

வடபிராந்திய போக்குவரத்துச்சபை கிளிநொச்சி சாலையில் சாலை முகாமையாளர் திரு. த. கந்தையா தலைமையில் சிரமதானம் நடைபெற்றது.

பஸ் திருத்தி அமைத்தல், பஸ் கழுவுதல், பஸ்களுக்கு வர்ணம் பூசுதல், சாலை வளவு துப்புரவு செய்தல் ஆகிய பணிகள் சிரமதானம் மூலம் மேற்கொள்ளப்பட்டன. சாலை உதவி முகாமையாளர் திரு. என். பத்மநாதன் சாலை பொறியியலாளர் திரு. எஸ். மகேஸ்வரன் ஆகியோரும் இதில் பங்குபற்றினர். (இ)

### 260குடும்பங்கள் வவுனியா சென்றன

கிளிநொச்சி, டிச. 4

கிளி நொச்சியிலுள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்திருந்த 297 குடும்பங்களில் சுமார் 260 குடும்பங்கள் வவுனியாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டன.

பன்குளம், மதவாச்சி ஆகிய இடங்களைச் சேர்ந்த மிகுதி சுமார் 37 குடும்பங்கள் மீண்டும் தங்கள் பழைய இடங்களுக்குச் செல்ல அச்சம் கொண்டுள்ளதால் இவர்கள் அகதி முகாம்களிலே தஞ்சமடைந்துள்ளனர். (இ-76)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

அறிவு நல்லறிவாய் நன்மை பயப்பதாய் அமைதல் வேண்டும். அகந்தையோடு கூடிய அறிவு பிறர் துயரம் கண்டு அழமாட்டாது
-காலில்கிப்ருன்

உதயன்
உண்மை - விருத்தாலமை - ஐக்கியம்
இல.15 ஆவது ஒழுங்கை தொலைபேசி: 24805
மின்சார நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம் 04-12 1986 த பெ இல 23

## சிதம்பரமும் பஞ்சாப்பும்

இனப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த சிதம்பரம் குழு இவ்வாரத்தில் கொழும்பு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அது நடக்காது என இப்போது அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தியத் தூதுவர் திரு ஜே என். டிக்ஸிற் உத்தியோகபூர்வமாகவே அது குறித்து ஜனாதிபதிக்குத் தெரிவித்துவிட்டார்.

சிதம்பரம் குழு கொழும்பு விஜயத்தை மட்டும் ரத்துச் செய்து, பின்போடவில்லை. தமிழ்ப்போராளிகளுடன் பேச்சு நடத்துவதற்காக சென்னைக்கு மேற்கொள்ள இருந்த விஜயத்தையும் ரத்துச் செய்திருக்கிறது.

சிதம்பரம் குழுவின் சென்னை, கொழும்பு விஜயங்கள் ரத்தானதற்கு காரணம் என்ன?

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைத்துவிட வேண்டும் என்று விரும்பும் எவர் மனதிலும் இந்தக் கேள்வி நிச்சயம் எழவே செய்யும்.

ஆனால் அந்தக் கேள்விக்கு ஸ்ரீலங்கா அரசு தனது ஊதுகுழல்களான லங்காபுவத் ரூபவாஹினி' ஆகியவற்றின் மூலம் கற்பித்த பதில் சிரிப்புக்கு இடமானது; சின்னத்தனமானது.

சிதம்பரம் குழுவின் விஜயம் சம்பந்தமான சின்ன விவகாரத்தில்கூட ஸ்ரீலங்கா அரசு இவ்வளவு சின்னத்தனமாக நடக்க முற்பட்டமை தானே தனது பெருமையையும் மதிப்பையும் குறைப்பதாகும். பஞ்சாப்பில் நடக்கும் கலவரம் காரணமாகத்தான் சிதம்பரம் குழு தனது சென்னை, கொழும்பு விஜயங்களை ரத்துச் செய்ததாக ரூபவாஹினி செவ்வாய்க்கிழமை இரவு 'கனகச்சிதமாக' அறிவித்தது. அப்பாடா! எத்தனை பெரிய கண்டு பிடிப்பு!!

ஆனால் இந்தியாவில் இருந்து வெளிவரும் பத்திரிகைகளும் புதுடில்லி அரசியல் வட்டாரங்களும் சிதம்பரம் குழுவின் விஜயங்கள் ரத்தானதற்குத் தெரிவித்த காரணங்கள் வேறு.

ஸ்ரீலங்கா அரசின் அணுகுமுறையில் காணப்படும் தெளிவின்மை. ஸ்ரீலங்கா அரசு விட்டுக் கொடுக்காத நிலையில் புதுடில்லி அரசு குழம்பிய நிலையில் இருக்கிறது.

இந்திய தூதுக்குழுவின் விஜயங்கள் ரத்தாகியதற்கு மேற்கண்டவையே காரணங்கள் என்று புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இணை அமைச்சர்கள் திரு சிதம்பரமும், திரு. நட்வர்சிங்கும் இந்திய அரசைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தமது விஜயங்களைப் பின்போட்டமைக்கான உரிய காரணம் இந்திய அரசுக்குத்தான் சரியாகத் தெரியும்.

ஆனால் ஸ்ரீ லங்கா அரசாங்கம் தனக்கு வாய்த்தாற் போலக் காரணத்தைக் கற்பனை செய்வதிலும், சொல்வதிலும் முந்திக்கொண்டு விட்டது.

இதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

இனப்பிரச்சினையைத் தீர்க்க விரும்புவதாகக் கூறும் அரசு, தமிழர் தாயகத்தைப் பிரிக்கவே நினைக்கிறது. தனது அந்த நிலையிலிருந்து விட்டுக்கொடுக்க அது விரும்பவில்லை. அப்படி விரும்பாத இடத்து சமரசப் பேச்சு நிச்சயம் குழம்பும் என்பதும் அதற்குத் தெரியும்.

அந்த உண்மை தற்காலிகமாகவேனும் வெளிவராமல் தடுக்கும் பொருட்டுத்தான் பஞ்சாப்புக்கும் சிதம்பரத்துக்கும் அது முடிச்சுப் போட்டிருக்கிறது. இப்படி முழங்காலுக்கும் மொட்டைத் தலைக்கும் முடிச்சுப் போடுவதில் ஸ்ரீ லங்கா அரசினர் அசகாயசூரர்கள் என்பது ஏற்கனவே பல சந்தர்ப்பங்களில் தமிழருக்குப் புரிந்த விடயம்.

அதே தந்திரத்தையே இப்போதும் அது கையாண்டிருக்கிறது.

தமது அழுங்குப் பிடியினால்தான் பேச்சுவார்த்தை குழம்பியது என்று வெளியில் தெரியாமல் தடுக்கும் ஒரு முன்னேற்பாட்டு யுக்தி இது.

அப்போதுதான் பேச்சு வார்த்தையைத் தொடருவோம் எனக் கூறிக்கூறி, இன ஒழிப்பை வெற்றிகரமாகச் செய்ய முடியும்.

இந்த நரித்தந்திரங்களும், சின்னத்தனங்களும் தொடரும்வரை இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு கிடைக்கும் என்று எப்படி எதிர்பார்ப்பது? அவ்வாறு நம்பிக்கை கொண்டால் அது வெறும் மனப்பால் குடிப்பதே அன்றி வேறில்லைப் பராபரமே!

ஈரான் விவகாரம் தொடர்பாக

# சுயேச்சையான விசாரணை நடத்த ரேகன் உத்தரவு

## கண்டனங்களுக்குப் பணிந்தார்

வாஷிங்டன், டிச. 3

ஈரானுக்கு ஆயுதங்கள் அனுப்பியது, அதனால் கிடைத்த பணத்தை நிக்கரகுவா கிளர்ச்சியாளருக்கு அனுப்பியது சம்பந்தமாக சுயேச்சையான விசாரணை ஒன்று நடத்தப்படவுள்ளது.

இந்த விசாரணை அதிகாரியை அமெரிக்க உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழு ஒன்று நியமிக்கும்.

இவ்விசாரணையின் போது குற்றவாளிகளாக காணப்படுவோர் தண்டிக்கப்படுவர்.

இப்படி அமெரிக்க அதிபர் ரேகன் அறிவித்து இருக்கிறார்.

ஈரானுக்கு ஆயுதம் விற்றது தொடர்பாக அமெரிக்காவில் உருவான எதிர்ப்புக்கள் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து தணிந்து உள்ளதாக பி. பி சி வானொலி இன்று அறிவித்தது.

அதிபர் ரேகனின் அறிவிப்பு, ஜனநாயகக்கட்சி உறுப்பினர்களை ஓரளவு திருப்திப்படுத்தி உள்ளது.

குடியரசுக் கட்சி உறுப்பினர்கள் மத்தியில் நிம்மதியை ஏற்படுத்தி உள்ளது.

வீழ்ச்சி அடைந்த பங்கு மார்க்கட் நிலவரம் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

இப்படி பி பி. சி வானொலி அறிவித்தது.

இதனிடையில் அதிபர் ரேகன், தனது தேசிய பாதுகாப்பு ஆலோசகராக சி. ஐ ஏ உளவு நிறுவனத்தின் துணை டைரக்டர் ஒருவரை நியமித்து இருக்கிறார்.

முன்னர் பதவியில் இருந்த அதிகாரி, ஈரான் ஆயுதப் பிரச்சினையில் இராஜினாமாச் செய்து விட்டார். (தி - எ)

## இஸ்ரவேல் ஜனாதிபதி சிங்கப்பூர் விஜயம்

### ஆசியனில் முரண்பாடு

சிங்கப்பூர், டிச. 3

இஸ்ரவேல் ஜனாதிபதியின் சிங்கப்பூர் விஜயம் ஆசியன் அமைப்பு நாடுகளிடையே கருத்து வேற்றுமையை ஏற படுத்தி உள்ளது.

சிங்கப்பூருக்கும் மலேசியாவுக்கும் இடையேயான உறவுகள் நல்லபடியாக இல்லை என்று மலேசியப் பிரதமர் டாக்டர் மஹதிர் முமது தெரிவித்தார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் எதிர்வரும் மாதங்களில் தீர்மானிக்கப்படும்.

மணிலாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள 'ஆசியன்' அமைப்புத் தலைவர்கள் உச்சிமாநாட்டை குழப்பும் அளவுக்கு இத்தகராறு வளராது என்றும் மலேசியப் பிரதமர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஆசியன் அமைப்பு நாடுகளான புருணி, மலேசியா, இந்தோனேஷியா ஆகியன இஸ்ரவேல் ஜனாதிபதியின் சிங்கப்பூர் விஜயம் குறித்து அதிருப்தி வெளியிட்டுள்ளன. (இ-எ)

### சென்னையிலும் பன்றி ஒழிப்பு

சென்னை, டிச 3

சென்னை நகரில் 'பன்றி ஒழிப்பு இயக்கம்' ஒன்றை மாநகராட்சி அதிகாரிகள் ஆரம்பித்துள்ளனர்.

அதிகாரிகளின் இந்த நடவடிக்கைக்கு பொது மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதுவரை 500 பன்றிகள் கொல்லப்பட்டன. (இ-எ)

## வெளி உலகில்

### ஆர்ஜென்டீனாவின் முன்னாள் பொலீஸ் அதிபருக்கு 23 வருட சிறை

புவனர்ஸ் அயர்ஸ், டிச 3

இராணுவ ஆட்சியின் கீழ் 9,000 பொது மக்களை சித்திரவதை செய்து கொலை செய்த குற்றங்களுக்காக ஆர்ஜென்டீனாவின் முன்னாள் பொலிஸ் அதிபர் ராமோ கிட் என்பவருக்கு 23 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

ஆர்ஜென்டீனா நீதிமன்றம் ஒன்று இத்தண்டனையை வழங்கியது.

இவர் மீது 70 சித்திரவதைக் குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. இவரின் உதவியாளர்கள் இரண்டு பேருக்கு முறையே 23,14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. (இ-எ)

### நிமிடத்துக்கு 7 குழந்தைகள் இறக்கின்றன

பிரேஸில், டிச 3

ஒவ்வொரு நிமிடமும் ஏழு குழந்தைகள் பிரேஸிலில் உயிரிழக்கின்றன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் மரணம் பற்றிய அறிக்கையில் அரசு இத்தகவலை வெளியிட்டுள்ளது.

1985 ஆம் ஆண்டில் 38 லட்சத்து 87 ஆயிரத்து 999 குழந்தைகள் பிரேஸிலில் பிறந்தன.

இந்த எண்ணிக்கையில் 3, 20,000 குழந்தைகள் இறந்தன.

இறந்த குழந்தைகளில் 84 சதவீதமானவை ஒரு வயதுக்குட்பட்டவை. (இ-எ)

### ஜோர்தான் கோரிக்கை

அம்மான், டிச. 3

வளைகுடா நாடுகளுக்கு எதிரான ஈரானிய பயமுறுத்தலைச் சமாளிக்க ஏற்கனவே உருவாக்கப்பட்ட பாதுகாப்பு உடன்படிக்கையை நடைமுறைப் படுத்தும்படி ஜோர்தான் அரபு லீக்கைக் கோரியுள்ளது.

ஜோர்தான் பிரதமர் சேட் றிபாய் இது சம்பந்தமாக அரபு லீக்குக்கு கடிதம் எழுதியிருக்கிறார். (இ - எ)

### பதவி நீக்கம்

டாக்கா, டிச. 3

புதிதாக உப ஜனாதிபதி ஒருவரை நியமித்த பங்களாதேஷ் ஜனாதிபதி முகமட் எர்ஷாட், உள்துறை அமைச்சரை பதவி நீக்கம் செய்தார். (இ-எ)

அபிவிருத்தித் திட்டங்கள் செயலாகும்போது

# கிளிநொச்சிப் பகுதி முன்னேற வாய்ப்பு

## அரசாங்க அதிபர் நம்பிக்கை

கிளிநொச்சி, டிச 4

ஒருமுகப்படுத்தப்பட்ட ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக்கென திட்டங்கள் தீட்டப்பட்டும் எதிர்பாராத விதமாக நிதிஒதுக்கீடுகள் முறையாக கிடைக்கப் பெறுதுள்ளன. இவை கிடைக்கும் பட்சத்தில் எமது மாவட்டம் முன்னேற வாய்ப்புக் கிட்டும்.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு ஜெகா செந்தில்நாதன் மேற்கண்டவாறு கூறினார்.

கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான 1987 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டு முன்னுரிமைப் படுத்தல் சம்பந்தமான கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

இக் கூட்டத்தில் அரசாங்க அதிபருக்கு உறுதுணையாக கிளிநொச்சி சிரேஷ்ட திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திரு. வி. செ. சுவாமிநாதன் பிரசன்னமாயிருந்தார்.

அத்தோடு கிளிநொச்சி சமநல சேவை உதவி ஆணையாளர் திரு. எஸ் முருகையா, நீர்ப்பாசனப் பொறியியலாளர் திரு ஐ. சுப்பிரமணியம், உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. எஸ் ரி பத்மநாதன், கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் சார்பில் நிர்வாக உத்தியோகத்தர் திரு. எஸ். வேலுப்பிள்ளை ஆகியோரும் மற்றும் அரச, கூட்டுத்தாபன, திணைக்கள அதிகாரிகள் விசேட சேவை உத்தியோகத்தர்கள், கிராமசேவகர்கள், மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் அரசாங்க அதிபர் மேலும் உரை நிகழ்த்துகையில், இம்முறை கிளிநொச்சி அபிவிருத்திப் பணிகள் மக்களின் உண்மையான தேவைகளை பிரதிபலிக்க வேண்டும் என்ற கோட்பாட்டில் அனுசரிக்கப்பட வேண்டும்.

அதனாலேயே இம்முறை 1987 நிதி ஒதுக்கீட்டு முன்னுரிமைப் படுத்தல் வேலைகளுக்கு மக்கள் பிரதிநிதிகளையும் அழைத்துள்ளோம்.

இவர்கள் அனைவரும் இடத்துக்கிடம் சமநிலை ஏற்படுத்தக் கூடியதாக திட்டம்தீட்ட வேண்டும். அவை ஒவ்வொரு துறையிலும் அமைய வேண்டும். மக்கள் எண்ணிக்கைக்கு ஏற்பவும் அமைத்தல அவசியம்.

இப்படி அவர் கூறினார்.

கிளிநொச்சி கிராம அபிவிருத்தி சங்கங்களின் ஒன்றியத்தின் தலைவர் திரு. ந. வேலாயுதம், ஒன்றியத்தின் உப செயலாளர் திரு. சி. திருக்கேதீஸ்வரன் ஆகியோரும் பேசினர். (இ-76)

### கைதடியில்

## ஆரம்ப சுகாதார நிலைய ஓராண்டு விழா

யாழ்ப்பாணம், டிச. 4

கைதடி தெற்கு ஆரம்ப சுகாதார நிலைய ஓராண்டு நிறைவு விழா, நிலைய மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

கைதடி சுகாதார பரிசோதகர் திரு ஏ. செல்லையா தலைமை வகித்தார்.

மக்களுக்கு சுகாதாரக் கல்வியின் அவசியத்தை நிலையத் தொண்டர்கள் புகட்ட வேண்டும் என்று திரு. செல்லையா தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

சுகாதார வைத்திய அதிகாரி திரு. கே. நடராசா பேசுகையில், சுகாதாரமும் நோய்த் தடையும்தான் முக்கிய குறிக்கோள் ஆகக் கொண்டு சுகாதார நிலையம் இயங்க வேண்டும் என்று வற்புறுத்தினர்.

ஆரம்ப சுகாதார நிலையத் தலைவர் திரு க. நடராசா பேசுகையில், ''தாய் சேய் நலம், சுற்றாடலுக்கும் சுகாதாரத் தொண்டர்கள் முக்கியத்துவம் கொடுத்து பணிபுரிய வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

கலை, கதம்ப நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன. (இ-எ)

## சமய சந்நிதிகளில்

### சுன்னாகத்தில் சிவதீட்சை

யாழ்ப்பாணம், டிச 4

சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் சிவ ஸ்ரீ நா சர்வேஸ்வரக் குருக்களினால் சிவதீட்சை வழங்கப்படவுள்ளது. (இ-எ)

### விநாயகர் ஷஷ்டி விரத விழா

யாழ்ப்பாணம், டிச 4

ஆனைக்கோட்டை, உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயத்தில் விநாயகர் ஷஷ்டி விரத விழா தொடர்பாக பிள்ளையார் கதை படிப்பு மற்றும் விசேட பூசைகள் இடம் பெறுகின்றன.

எதிர்வரும் சனிக்கிழமை மாலை கஜமுகாசுர சம்ஹாரம், பிராயச்சித்த அபிஷேகம், விநாயகப் பெருமான் ஊர் வலம் ஆகியனவும், ஞாயிற்றுக்கிழமை மாலை பஞ்சமுக அர்ச்சனை, திருவிளக்குப்பூசை ஆகியனவும் இடம் பெறும். (இ-எ)

### சிறுவர் தினம்

சாவகச்சேரி, டிச 4

ஒவ்வொரு வருடமும் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதியை தமிழ் சமுதாயம் ''தமிழ் சிறுவர் தினமாக'' கொண்டாடல் வேண்டும் என அறவழிப் போராட்டக்குழு பிரகடனம் செய்துள்ளது.

இத்தினத்தை இந்த வருடம் முதல் முறையாக மிகவும் சிறப்பான முறையில் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகளை மேற்படி குழுவினர் செய்துவருகின்றனர்.

இத்தினத்தில் 25 அறவழி பாலர் கழகங்களில் கல்விபயில்கின்ற சுமார் 800 சிறுவர், சிறுமிகள் சிறுவர் ஊர்வலம், சிறுவர் பொதுக் கூட்டம், சிறுவர் கலை நிகழ்ச்சி, சிறுவர் பிரார்த்தனை போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவர்.

இந்த வைபவங்கள் அறவழி போராட்டக் குழுவினரின் பணிமனை முன்பாக நடைபெறும்.

## பொய்யாமொழி



குறள்:

நல்லாறு எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
கொல்லாமை சூழும் நெறி.

பொருள்:

நல்லவழி என்று அறநூல்களால் சொல்லப்படுவது எது என்றால், எந்த உயிரையும் கொல்லாத அறத்தைப் போற்றும் நெறியாகும்.

## உணவுப் பஞ்சத்தை சமாளிக்க வீட்டுத் தோட்டம்

### மரம்நடும் விழாவில் உரை

காங்கேசன்துறை, டிச.4

இன்றைய இக்கட்டான நிலையில் உணவுப் பஞ்சம் ஏற்பட்டாலும் அதனைச் சமாளிக்கக் கூடிய வகையில் எம்மை நாம் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். வீட்டுத் தோட்டங்களை வீடுகள் தோறும் அமைக்க வேண்டும்,

ஊறெழு கணேச வித்தியாசாலை மண்டபத்தில் ஊறெழு பயிர்ச் செய்கை அலுவலர் பிரிவு மரம் நடும் விழா நடைபெற்றது.

அதில் கலந்துரையாற்றிய தேசிய கூட்டுறவுச் சபைத்தலைவர் திரு எஸ். சிவமகாராசா மேற்கண்டவாறு கூறினார்.

பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு சி சக்திகிரீவன் தலைமையில் நடந்த இவ்வைபவத்தில் தொழிலதிபர் திரு க. கனகராசா கலந்து கொண்டு மரக்கன்றுகளை அன்பளிப்புச் செய்தார்.

சிவஸ்ரீ. வைத்தியநாதக்குருக்கள் ஆசியுரை வழங்கினார்.

மற்றும் திரு சி. கணேசு, திரு த கணேசு திரு சி. பாலசுப்பிரமணியம், திரு க.வை.தனேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர் (இ-68)

### 5 பொலீஸார் மரணம்

யாழ்ப்பாணம், டிச. 4

ஹொரவப்பொத்தானை தாக்குதல் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை வருமாறு:-

28ம் திகதி காலை 9 மணி அளவில் ஹொரவப்பொத்தானைக்கும் அனுராதபுரத்துக்கும் இடைப்பட்ட வீதியால் பொலீஸ் ஜீப் ஒன்று வந்து கொண்டிருந்தது.

எமது வீரர்கள் அந்த ஜீப் மீது நேரடி தாக்குதல் நடத்தியதில் அதில் வந்த 5பொலீஸார் அதே இடத்தில் கொல்லப்பட்டனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## ''முன்மாதிரியான சேவை புரிந்தவர்''

வட்டுக்கோட்டை, டிச 4

ஆசிரியர் திரு. குலசிங்கம் ஆசிரிய சமுதாயத்திற்கு ஓர் எடுத்துக் காட்டான ஆசிரியராகத் திகழ்ந்தார். இவரது நேரம் தவறாத வருகையும் காலம் தாழ்த்தாத சேவையும் கட்டளை பிறழாத பணியும் ஆசிரிய உலகுக்கு ஒரு முன் மாதிரியான சேவையாக விளங்கியதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. மாணவர், ஆசிரியர், பெற்றோர் மத்தியில் நன்மதிப்புப் பெற்ற சிறந்த ஆசிரியரான இவர் இளைப்பாறுவது பேரிழப்பாகவே அமைந்துள்ளது.

சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலையில் ஆசிரியராகக்கடமையாற்றிய திரு. கு அ. குலசிங்கம் இளைப்பாறுவதை முன்னிட்டு நடைபெற்ற சேவை நலம் பாராட்டு விழாவில் தலைமையுரை நிகழ்த்திய பாடசாலை அதிபர் திரு. மு சுப்பிரமணியம் மேற் கண்டவாறு கூறினர்.

பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர் திரு. பொ. கனகரத்தினம் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

ஆசிரியை திருமதி என். செல்லையா பாராட்டுப் பத்திரத்தை வாசித்து வழங்கினர்.

முன்னாள் அதிபர் திரு. பொ சிவகுரு, திருமதி க நல்லதம்பி, ஆசிரியர் திரு ப. நவரத்தினம், ஆகியோர் பாராட்டுரை வழங்கினர்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு.கு.அ குலசிங்கம் பதிலுரை வழங்கியதோடு பாடசாலை முன்றலில் மரம் நடும் வைபவத்தையும் ஆரம்பித்து வைத்தார்.

திருமதி என். செல்லையா ஆசிரியை நன்றி நவின்றார். (இ-161)

### சமய சஞ்சிகை

ஊர்காவற்றுறை, டிச. 4

சுருவில் திருமறைக் கழகத்தினர் சமய சஞ்சிகை ஒன்றை வெளியிட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேற்படி கழகத்தின் தலைவரான திரு. க. சிவசம்பு தலைமையில் சஞ்சிகை வெளியீட்டுக்குழு ஒன்றும் தெரிவாகியுள்ளது (இ - 16)

### புருவுக்கு 57,000டாலர்

லண்டன், டிச. 3

புறு ஒன்று 57,000 டாலகளுக்கு லண்டனில் உள்ள புறு வளர்க்கும் நிறுவனம் ஒன்றினால் வாங்கப்பட்டது.

இந்தப் புறு 600 மைல்கள் தொடர்ந்தாற்போல் பறக்கக் கூடியது.

மணித்தியாலத்திற்கு 40 — 50 மைல் வேகத்தில் பறக்கும்.

மத்திய இங்கிலாந்தில் உள்ள வேரால் பண்ணை நிர்வாகமே இப்புறுவை வாங்கியது. (இ - எ)

### பிரான்ஸிடம் 'நியூட்ரன்' குண்டு

வாஷிங்டன், டிச.3

பிரான்ஸும் நியூட்ரன் குண்டு தயாரித்துள்ளது.

பெரிய அளவில் நியூட்ரன் குண்டுகளை தயாரிக்க பிரான்ஸ் நடவடிக்கை எடுக்கக் கூடும் என்று அமெரிக்க பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

பிரெஞ்சு நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு அமைச்சர் அன்ட்ரூ கிராட் இது சம்பந்தமாகத் தகவல் வெளியிட்டதாக அமெரிக்கப் பத்திரிகைகள் தெரிவித்தன. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த முறையில் வீடியோ படம் எடுப்பதற்கு
**வீடியோ விஹொன்ஸ்**
ஒளிப்பதிவாளர்
**சி. இராஜராஜனின்**
சகல நுணுக்க ஒளிப்பதிவில்
உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்கல
நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்துகொள்ளுங்கள்
அரசடி லேன்,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.

# உதயன்

04 12 1986 வியாழக்கிழமை

For quality Video Filming
VIDEO VIHONS
RAJARAJHAN'S
Effects and Techniques in videography gives great pleasure for all your memorable events at home or else.
ARASADY LANE,
KONDAVIL EAST, KONDAVIL.

கோட்டை ஓய்வூதியர்:

# வங்கிக் கணக்குகளை மாற்ற அரச அதிபர் ஆலோசனை

யாழ்ப்பாணம், டிச. 4
யாழ் கோட்டை வங்கியில் ஓய்வூதியம் பெற்று வருபவர்கள் கூடியவிரைவில் தமது வங்கிக்கணக்குகளைக் கிராம வங்கிகளுக்கோ அல்லது வேறு வங்கிகளுக்கோ மாற்றும்படி யாழ் அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஓய்வூதியர்கள் கோட்டை முகாமில் ஓய்வூதியம் பெற்று வந்தனர்.

எனினும் ஓய்வூதியம் பெறுவதில் அவர்கள் பட்ட இன்னல்களை அடுத்து பல ஓய்வூதியர்கள் தமது கணக்குகளைத் தமது சொந்த இடங்களுக்கு மாற்றி உள்ளார்கள்.

தற்பொழுது 500 ஓய்வூதியர்கள் மட்டுமே கோட்டைமுகாமில் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள்.

இவர்களையும் கூடிய விரைவில் கணக்குகளை மாற்றிக்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-10)

## இன்று பல்கலைக்கழகத்தில் பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 4
இன்று காலை 9-00 மணிக்கு பல்கலைக்கழகத்தில் வெகுஜன அமைப்புக்களுக்கான கூட்டம் ஒன்றை மாணவர் அமைப்புக் குழுவினர் நடத்துகிறார்கள்.

விஜிதரன் தொடர்பான விடயங்கள் இங்கு ஆராயப்படவுள்ளன. (இ-5)

## இலங்கை மீண்டும் தோல்வி அடைந்தது

### ரிச்சாட்சன் 109 ஓட்டம்

ஷார்ஜா, டிச 4
ஷார்ஜாவில் நடைபெற்ற நேற்றைய கிரிக்கெட் ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் அணி ஐந்து விக்கெட்டுகளால் இலங்கை அணியைத் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒதுக்கப்பட்ட 45 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 248 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ரிச்சி ரிச்சாட்சன் சிறப்பாக ஆடி 109 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து ஆடிய இலங்கை அணி 28. 3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 53 ஓட்டங்கள் மட்டும் பெற்று போட்டியில் தோல்வி அடைந்தது. (இ)

## உயிலங்குளம் தபால்நிலையம் ஸ்தம்பிதம்

மன்னார் உயிலங்குளம் உபதபால் நிலையம் கடந்த திங்கட்கிழமைமுதல் இயங்காது இருந்து வருகிறது.

கடந்த திங்கட்கிழமை இப்பகுதியில் நடைபெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தை அடுத்தே ஊழியர்கள் பயம் காரணமாக வேலைக்குச் செல்ல மறுத்து வருகின்றனர்.

உயிலங்குளம் பகுதி தபால்சேவைகள் ஸ்தம்பிதநிலையை அடைந்துள்ளன. (இ-10)

## தொலைத் தொடர்பு அலுவலகத்தில் ராணுவம் நிலை கொள்ளுமா?

யாழ்ப்பாணம், டிச. 4
யாழ். தொலைத் தொடர்பு திணைக்களத்தை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்று அறியவருகிறது.

தொலைத் தொடர்புத் திணைக்களத்தில் உள்ள பல பெறுமதிமிக்க எலக்ரோனிக் இயந்திரங்களுக்கு பாதுகாப்பு இல்லை என்ற காரணத்தினாலேயே இராணுவத்தினர் அதனை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சி எடுத்து வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சில் ஆராயப்பட்டு வருவதாகவும் நம்பப்படுகிறது. (இ-10)

## தொலைத்தொடர்பு ஊழியரின் அவசர கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 4
யாழ் தொலைத் தொடர்பு அலுவலகத்துக்கு ஊழியர்கள் மீண்டும் வேலை செய்யச் செல்வது பற்றி இன்று வியாழன் நடைபெறும் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ளது.

இக் கூட்டம் இன்று காலை 8 மணியளவில் கொட்டடியில் உள்ள தொலைத் தொடர்பு பொறியியலாளர் வீட்டில் நடைபெறும்.

தொலைத் தொடர்பு அலுவலக ஊழியர்கள் அனைவரும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி கோரப்பட்டுள்ளனர். (இ-எ)

## வான் மோதி வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம், டிச 4
வீட்டிலிருந்து மீன் வாங்கச் சென்ற வயோதிபர் மினிவான் மோதி மரணமானார்.

வயோதிபரை மோதிய மினிவான் ஓடி மறைந்து விட்டது.

நேற்று வட்டுக்கோட்டையில் இச்சம்பவம் நடந்தது.

சின்னப்பொடி நாகமுத்து (92 வயது) என்ற வயோதிபரே இறந்தவர் ஆவார்.

இவரது மரண விசாரணையை யாழ் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. க. கேசவன் நடத்தினார். (இ-10)

## இரண்டாவது டெஸ்ட் வெற்றி தோல்வி இல்லை

பேர்த், டிச 4
இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் இடையே பேர்த்தில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட்கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

391 ஓட்டங்களை பெற்றால் வெற்றிபெற முடியும் என்ற நிலையில் ஐந்தாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்து ஆஸ்திரேலிய அணி ஆட்டமுடிவில் 4 விக்கெட் நஷ்டத்திற்கு 197 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

ஸ்கோர் விவரம்:-
இங்கிலாந்து: 8 விக்கெட் நஷ்டத்திற்கு 592 ஓட்டங்களும் 8 விக்கெட் நஷ்டத்திற்கு 199 ஓட்டங்களும்
ஆஸ்திரேலியா: சகல விக்கெட்டுக்களையும் இழந்து 401 ஓட்டங்களும் 4 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 197 ஓட்டங்களும்.

முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றது தெரிந்ததே. (இ)

## தேர்தலுக்கு--

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
வழிநடத்துவது போல உள்ளது.

தற்சமயம் நாடு 9 மாகாணங்களாகப் பிரிந்துள்ளது.

மாகாணசபைத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாகாணமும் தனி இறைமையைக் கொண்டதாக இருக்கப்போகிறது. தற்போது 9, பதினொன்றுகப் பிரிக்கப்படவுள்ளது.

ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்கள் மாகாண முதலமைச்சர்களுக்கும் கிடைக்கப்போகிறது.

இப்படி திருமதி பண்டாரநாயக்கா சொன்னார். (இ-எ)

## வாங்கவும் / விற்கவும்

எப்பொருள்களானாலும் புதியனவைகளானாலும் - பழையவைகளானாலும் வாங்கவும்/விற்கவும் தினமும் எம்மை நாடுங்கள். எங்களிடம் புதியனவும்-பழையனவுமாகிய நானாவித பொருள்கள் மலிவு விற்பனைக்கிருக்கின்றன.
லக்கி பெனிபிட் கொம்பனி லிமிட்டட், பொதுச் சந்தை (சந்திக்கருகாமையில்), கோப்பாய்.

உங்கள் உருளைக்கிழங்கு தக்காளி பயிர்களைத் தாக்கும் முன்பின் கூற்று வெளிறல் (ஏர்லி லேட் பிளைட்) நோயை வெகு சுலபமாகக் கட்டுப்படுத்த புதிய விஞ்ஞான கண்டு பிடிப்பு

# கோசைட் 101

குயிப்ரிக் ஹைட்ரொக்சைட் உலோக செம்பு 50% பூஞ்சண கொல்லி

Griffin

திராட்சை, புகையிலை. மிளகாய் வெங்காயம், பூசணிவகை கரட், கோவா, போஞ்சி, சலாது. கோப்பி, தேயிலை, வெற்றிலை அலங்காரத்தாவரம் மற்றும் பயிர்களில் ஏற்படும் பூஞ்சண நோய்களை கட்டுப்படுத்த சிபாரிசு செய்யப் பட்டுள்ளது.

இது அமெரிக்க கிரிப்பின் இன்டர்நெஷனலின் தயாரிப்பு

விலை ரூ. 25/50 அதற்கு மேலும்

அங்லோ-ஏஷியன் பேர்ட்டிலைசர்ஸ் லிமிட்டட்
சாற்றட்வங்கிக் கட்டிடம் கொழும்பு 1.



எச்சரிக்கை:
எல்லா பீடைநாசினிகளும் அபாயகரமானவை கவனமாகக் கையாளவும்.

Skarab

## இரண்டாவது நினைவஞ்சலி



**Dr. தாமோதரம்பிள்ளை தம்பையாபிள்ளை**
Imperial College of Science and Technology, University of London.

அன்பால் நினைவுகூருகிறோம்,
மனைவி, பிள்ளைகள், சகோதரி.

59, Cloisters Avenue,
Bickley, Kent,
England

## மட்டுநகரில் சாவகச்சேரிவாசி கைதாகி விடுதலை

மட்டக்களப்பு, டிச. 4
மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரிப் பட்டதாரி ஆசிரியர் ஒருவர் கல்லடி முகாமில் ஆயுதப்படையினரால் விசாரிக்கப்பட்ட பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டார்.

நேற்று இச்சம்பவம் இடம் பெற்றது

சாவகச்சேரிவாசியான திரு. ஆறுமுகம் என்பவர்தான் இந்த ஆசிரியர்.

இவரை விசாரணைக்கு முகாமுக்கு கொண்டு வரும்படி இராணுவ இணைப்பதிகாரி, கல்லூரி அதிபர் வித்வான் கமலநாதனை தொலைபேசியில் கேட்டுக்கொண்டார்.

அதன்படி அதிபர், ஆசிரியரை முகாமுக்கு அழைத்துச் சென்றார். அனுமதேய தகவல் ஒன்று தொடர்பாக இவ்விசாரணை நடத்தப்பட்டது என்று பின்னர் தெரிவிக்கப்பட்டது. (இ-எ-21)

## 5 நாள் பாத----

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஆகியவையே பாதயாத்திரை நடத்தப்படும் பிரிவுகள் ஆகும்.

5 நாட்கள் தொடர்ந்து நடைபெறும் இப் பாதயாத்திரையில்; இரவில் மாணவர்கள் ஆங்காங்கே உள்ள ஊர்களில் தங்குவர்.

பொது மக்களையும்; பொது ஸ்தாபனங்களையும் பாத யாத்திரையில் கலந்து கொள்ளும்படி மாணவர் அமைப்புக் குழு கேட்டுள்ளது. (இ-5)

## ஜீ. சி. ஈ---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
இயங்கும்.

இப்பரீட்சை 13 ஆம் திகதியுடன் முடிவடையும். விடைத்தாள்கள் கொழும்பில் வைத்தே திருத்தப்படும். (இ-5)

## லலித்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ஊரப்பு நிலையத்தின் பேட்டி நிகழ்ச்சி ஒன்றிலும் அமைச்சர் கலந்து கொள்ள இருக்கிறார்.

டிசம்பர் 15 அளவில் அமைச்சர் நாடு திரும்புவார் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-ஐ-எ)

## பிரயாண ஒழுங்குகள்

★ சவூதி அரேபியா ★ சிங்கப்பூர் ★ குவைத் ★ ஜேர்மனி ★ லண்டன் U.K. ★ நோர்வே

1. சவூதி அரேபியாவுக்கு (Open Visa) தொழில் வாய்ப்புடன் உடனடி பிரயாணம் மேற்கொள்ள விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்.
2. சிங்கப்பூர் தொழில் வாய்ப்புடன் செல்லவிரும்பும் பெண்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
3. குவைத் குவைத் டிறைவிங் லைசென்ஸ் உள்ளவர் உடனடியாக தொடர்பு கொள்ளவும்
4. ஜேர்மனி - லண்டன் செல்ல விரும்புவோரும் உடன் தொடர்பு கொள்ளவும்.

(குறிப்பிட்ட வெற்றிடங்கள் மட்டும் உண்டு)
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**TRI STAR TRAVELS**
**றை ஸ்ரார் றவல்ஸ்**
No. 6, நவீன சந்தை மேல்மாடி.
தொலைபேசி இல: 23831

மு.கு: யாழ்நகர் நிலைமை சீரற்று, எமது அலுவலகம் மூடப்பட்டிருப்பின் கீழ் வரும் முகவரிகளில் தொடர்பு கொள்ளவும்.
71, குருசோ வீதி, (சுண்டுக்குளி) யாழ்ப்பாணம்.
வே. குகராஜா, மயிலியதிபுலம் கந்தசாமி கோயிலடி, அராலி வடக்கு.
N. தயாளன், மயிலணி வடக்கு, சுன்னாகம்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 04-12-1986
Printed and Published by Uthayan Publications (Private) Ltd 15 Second Lane, Power House Road, JAFFNA. Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 N 86. T'PhoneNo. 24805, 22073

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org